**(சுருக்கம்)**

திருத்திய ஊதிய விகிதங்கள், 2009 – நில அளவைத் துறையில் பணிபுரியும் நில அளவையாளர், வரைவாளர், பிர்கா அளவையாளர் மற்றும் நில பதிவேடு வரைவாளர் பணியிடங்களுக்கு ஊதிய திருத்தம் அனுமதித்து ஆணையிடப்படுகிறது.

---

**நிதி (ஊதியப்பிரிவு)த் துறை**

அ.ஆ. நிலை எண்:69

நாள்: 26—2—2011.
மாசி,14.
திருவள்ளுவர் ஆண்டு, 2042.

**படிக்கவும்:--**

1. அரசாணை நிலை எண்.234, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 1–6–2009.
2. அரசாணை நிலை எண்.235, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 1–6–2009.
3. அரசு கடித எண்.41530 / ஊதியப் பிரிவு / 2009–1, நிதித்துறை, நாள்: 28–7–2009.
4. அரசு கடித எண்.63305 / ஊதியப் பிரிவு / 2010–1 மற்றும் 2, நிதித்துறை, நாள்: 8–11–2010.
5. அரசாணை நிலை எண்.45, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள். 10–2–2011.
6. தமிழ்நாடு நில அளவைத்துறை சங்கங்களின் கூட்டமைப்பு மனு நாள். 17–02–2011.

– – – – –

**ஆணை:–**

அலுவலர் குழு, 2009–ன் பரிந்துரைகளின்படி அனைத்து துறைகளில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் / தட்டச்சர்கள், உதவியாளர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–III ஆகிய பணியிடங்களுக்கு திருத்திய ஊதிய விகிதங்கள் முறையே ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000 மற்றும் ரூ.5200 –20200 + தர ஊதியம் ரூ.2400 அனுமதித்து 1–1–2006 முதல் கருத்தியலாகவும் 1–1–2007 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன. அவ்வாறே நில அளவைத் துறையில் பணிபுரியும் நில அளவையாளர், வரைவாளர், பிர்கா அளவையாளர் மற்றும் நில பதிவேடு வரைவாளர் ஆகிய பணியிடங்களுக்கும் திருத்திய ஊதிய விகிதங்கள் முறையே ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000 மற்றும் ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2400 நிர்ணயித்து ஆணையிடப்பட்டது.

2. மேலே–5–ல் படிக்கப்பட்ட அரசாணையில் அனைத்து துறைகளில் உள்ள இளநிலை உதவியாளர் / தட்டச்சர், உதவியாளர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–III ஆகிய பணியிடங்களுக்கு முறையே ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000–லிருந்து ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2400–ஆகவும் ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2400–லிருந்து ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2800–ஆகவும் நிர்ணயம் செய்து 1–1–2006 முதல் கருத்தியலாகவும் 1–2–2011 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. நில அளவைத் துறையில் உள்ள நில அளவையாளர் / வரைவாளர், பிர்கா அளவையாளர் மற்றும் நில பதிவேடு வரைவாளர் ஆகிய பணியிடங்களுக்கு இளநிலை உதவியாளர் / உதவியாளர் பணியிடத்திற்கு அனுமதிக்கப்பட்ட முந்தைய ஊதிய விகிதமான ரூ.3200—4900 / ரூ.4000–6000–க்கு இணையான திருத்திய ஊதிய விகிதம் அலுவலர் குழு, 2009 பரிந்துரையின்படி ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000 மற்றும் ரூ.5200–20200 + தர ஊதியம் ரூ.2400 நிர்ணயம் செய்யப்பட்டு சமநிலையில் இருந்து வந்துள்ளனர். இந்நிலையினைக் கருத்தில் கொண்டு மேலே 5–ல் படிக்கப்பட்ட அரசாணையில் இளநிலை உதவியாளர் / உதவியாளர்களுக்கு முறையே ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000–லிருந்து ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2400–ஆகவும் ரூ.5200–20200 + தர ஊதியம் ரூ.2400–லிருந்து ரூ.5200–20200 + தர ஊதியம் ரூ.2800 ஆகவும் ஊதிய திருத்தம் செய்யப்பட்டதை மேற்கூறிய நில அளவைத்துறையில் உள்ள பணியிடங்களுக்கும் நீட்டிக்கலாம் என முடிவு எடுத்து அதற்கிணங்க கீழ்கண்ட பணியிடங்களுக்கு ஊதிய திருத்தங்கள் செய்து அரசு ஆணையிடுகிறது.

| வரிசை எண். | **பணியிடங்களின் பெயர்** | **தற்போதைய ஊதிய விகிதம் (ஊதிய விகிதம் + தர ஊதியம்)** | **திருத்தியமைக்கப்படும் ஊதிய விகிதம் + தர ஊதியம்** |
|---|---|---|---|
| 1. | நில அளவையாளர் | 5200—20200 + 2000 | 5200—20200 + 2400 |
| 2. | வரைவாளர் | 5200—20200 + 2000 | 5200—20200 + 2400 |
| 3. | பிர்கா அளவையாளர் | 5200–20200 + 2400 | 5200–20200 + 2800 |
| 4. | நில பதிவேடு வரைவாளர் | 5200–20200 + 2400 | 5200–20200 + 2800 |

4. மேற்கூறிய ஊதிய திருத்தங்கள் 1–1–2006 முதல் கருத்தியலாகவும் 1–3–2011 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

**/ஆளுநரின் ஆணைப்படி /**

**க. சண்முகம்,**
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அரசு முதன்மைச் செயலாளர், வருவாய்த்துறை, சென்னை – 9.
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை – 5.
முதன்மைச் செயலாளர் மற்றும் நில சீர்திருத்த ஆணையர், சென்னை – 5.
மாநில கணக்குத் துறைத் தலைவர் ( கணக்குகள் (ம) உரிமைத் தொகை) , சென்னை–18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை –I), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை –II), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (CAB), சென்னை–9 / மதுரை.
கருவூலங்கள் மற்றும் கணக்குகள் இயக்குநர், சென்னை–15.
ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை–6.
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை–108.

...... / 3 /

ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–6.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை–9.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், (வடக்கு/ தெற்கு / கிழக்கு ) சென்னை – 1 /35/5.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், மதுரை – 625 001.
அனைத்து கருவூல அலுவலர்கள் / அனைத்து சார்நிலைக் கருவூல அலுவலர்கள்.

<u>நகல் பெறுவோர்:</u>
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை—2.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் செயலாளர், சென்னை—2.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை—2.
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை—2.
அரசு தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை—2.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், நிதித்துறை, சென்னை—9.
வருவாய்த்துறை, சென்னை – 9.
நிதி (வருவாய்)த்துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

து. ஸ்ரீதர்
26/2/2011

ஆராய்ச்சி அலுவலர்.